**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 101 /2023**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் நாள் வியாழன்கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பால்ராஜ் | த/பெ.: | கோவில்பிள்ளை |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | தேங்காய் வியாபாரம் |
| வயது: | 80 | முகவரி: | 1/123, மன்னை ரோடு, பால்ராஜ் நகர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.10.2023

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.09.2017 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிசிரி நோட்டு - அசல் |
| வா.சா.ஆ.2 | 10.08.2020 | வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு கொடுத்த அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 13.08.2020 | பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை - நகல் |
| வா.சா.ஆ.4 | 19.08.2020 | பிரதிவாதியின் வழக்கறிஞர் பதிலறிவிப்பு - அசல் |

ஓம்.கே.சக்திவேல்,
சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.